**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.537/2012**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மாரிமுத்து** | **Caste** | : | |
| **Father's Name** | : | **சண்முகம்** | **Calling** | : | **சிறப்பு சார்பு ஆய்வாளர்** |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | | **50/ 26** |
| | | | **Dated** | : | **13.07.2026** |

**13.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி– 1 **திரு. மாரிமுத்து** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். வழக்கின் புலன்விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் நசீர் பாட்ஷா பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டதாலும் அவரி்ன் கையெழுத்து கையொப்பம் நன்கு பரிட்சயம் என்பதாலும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.11.2012ம் தேதி தலைமைக்காவலர் குமார் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சிலுக்குவார்பட்டி ஆறுமுகம் மகன் வடிவேல் எதிரியுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற

எண்.1255/2012 சட்டப்பிரிவுகள் 387 இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் சாட்சிகள் ராபர்ட் சைது அபுதாகி முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு சாட்சிகள் வடிவேல், குரு , தலைமைக்காவலர் குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர நிலையத்தில் ஆஜரில் இருந்த எதிரியை காரணம் கூறி கைதுசெய்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்பு தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 387 இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.13 18:44:22 +0530

Judicial Magistrate No.II
Dindigul.